

FinanceMission

# FinanceMission Heroes –

நிதித்திறனை விளையாட்டில் கற்றுக்கொள்ளல்

அன்பான பெற்றோர்களே

சுவிசில் வாழும் 18-தொடக்கம் 24- வயதானவர்களில் காலவாசிப் பகுதியினருக்கு மேலானவர்கள் பணம் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையுடன் வாழ்கின்றனர்.* இவ்வாறு இளையோர் கடனாளிகளாகா மல் இருக்க, அவர்கள் பணம் மற்றும் கொள்வனவைப் பொறுப்புணர்வுடன் பழகிக்கொள்ள, அவர்கள் நேரகாலத்துடன் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே உயர்தரப் பாடசாலை மாணவ மாணவிகளின் புதிய பாடத் திட்டத்தில் நிதிக் கல்வியறிவை மேம்படுத்துவதும் உள்ளடங்கியுள்ளது.

ஆகவே ஆசிரியர்களின் சங்கங்களான LCH மற்றும் SER டிஜிற்றலில் கற்கும் விளையாட்டான FinanceMission Heroes என்பதை, சுவிஸ் மாநில வங்கிகளின் உதவியுடன் உருவாக்கியுள்ளார்கள்.

FinanceMission Heroes என்பது தனியாக ஒரு விளையாட்டல்ல, மாறாக மிகவும் பிரயோசனமான ஒரு கற்கும் விளையாட்டு, இது வித்தியாசமான துறைசார் நபர்களால் ஒன்றுசேர்ந்து உருவாக்கப்பட்டு உள்ளது. இது கவனத்துடன் பணத்தை மற்றும் தனிப்பட்ட தேவைகளைக் கையாள்வது குறித்துப் பயிற்றுவிக்கின்றது.

ஒரு தடவை மாணவ மாணவிகள் பாடநேரத்தில் டிஜிற்றல் விளையாட்டுக்கு அனுமதிக்கப்படுவார்கள், அதன்போது அவர்கள் FinanceMission Heroes ஐ விளையாடிக் கற்பதுடன் ஒரு வரவு-செலவுப் பட்டியலை ஏற்படுத்தி, கொள்முதல் முடிவுகளை மதிப்பீடு செய்வதுடன், கொள்வனவு- மற்றும் தொடர்ந்துவரும் செலவுகளுக்கு இடையே உள்ள வித்தியாசங்கள் மற்றும் வேறு பலவற்றையும் அறிந்து கொள்வார்கள்.

இருப்பினும் இந்த விளையாட்டு, பாடநேரத்தில் ஒருசிறிய பகுதியை மட்டுமே தனக்கென எடுத்துக்கொள்ளும். FinanceMission கற்கும் வாய்ப்பில், மாணவ மாணவிகள், விளையாட்டின்போது பெற்ற அனுபவங்களை தமது குறிப்புப் பக்கங்களில் எழுதிவைப்பதுடன் அதை நாளாந்த வாழ்வில் பயிற்சி செய்து மேலும் ஆழமாகக் கற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களை நீங்கள் எமது இணையத்தளத்தில் காணலாம் www.financemission.ch, அத்துடன் விசேடமாக கேள்விகள் மற்றும் பதில்களையும் இங்கே காணலாம், www.financemission.ch/faq.

இதைவிடவும்: FinanceMission Heroes 2016 இல் Best of Swiss Apps எனும் வெண்கலப்-பதக்கத்தை வெற்றி பெற்றுள்ளது.

உங்கள் பிள்ளையும், இந்தக் கற்கும் வாய்ப்பைப் பயன்படுத்துவதுடன், இதன்மூலம் தனது நிதித்திறனை மேம்படுத்துவது குறித்து, நாங்கள் மகிழ்வடைகின்றோம்.

அன்பு வாழ்த்துக்களுடன்
FinanceMission சங்கம்

பியற் வே. செம்ப்
Beat W. Zemp
தலைவர் LCH

சாமுவல் றோர்பாக்
Samuel Rohrbach
நிர்வாகசபை உறுப்பினர்
தலைவர் SER

* மத்திய புள்ளிவிபரத் திணைக்களம் எடுத்த மதிப்பீட்டின்படி